**உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், ஆத்தூர்**

**முன்னிலை: திரு.S. அன்புதாசன், பி.காம்., பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், ஆத்தூர்**
**2026 ம் ஆண்டு ஜீலை திங்கள் 04 ஆம் நாள் சனிக்கிழமை**
**I.A.NO. 06/2026 in O.S. No.60/2021**

வெங்கடேஷ் பிரபு ... மனுதாரர்/6ம் பிரதிவாதி

/எதிர்/

1. சுப்பிரமணி
2. பிரேமலதா ... எதிர்மனுதாரர்கள்/வாதிகள்

இம்மனுவானது 04.07.2026 இன்று இந்நீதிமன்ற விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/6ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.ராமகிருஷ்ணன் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.N.மாதவராஜன் அவர்கள் முன்னிலையாகியும், மனு மற்றும் வழக்கு ஆவணங்களைப் பரிசீலித்தும் இந்நீதிமன்றம் வழங்கும்.

**உத்தரவு**

மனுதாரர்கள்/6ம் பிரதிவாதி தரப்பில் ஆவணங்கள் தாக்கல் செய்வதிலுள்ள காலதாமதத்தினை மன்னித்து, மேற்படி ஆவணங்களை மனுதாரர்கள்/6ம் பிரதிவாதி தரப்பு ஆவணங்களாக ஏற்றுக்கொண்டு வழக்கை மேல் நடத்த வேண்டி கட்டளை 8 விதி 1-A(3) மற்றும் சி.பி.சி. 151-ன்படி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**ஆவணங்களின் விபரம்**

| வ.எ | தேதி | ஆவணங்களின் விபரம் | தன்மை |
|---|---|---|---|

| ண். | | | |
|---|---|---|---|
| 1. | 30.01.2025 | அரசு புறம்போக்கு நிலமான தாவா சொத்தில் 1–ம் வாதி வேப்பமரம் வெட்டி அரசுக்கு நட்டம் ஏற்படுத்தியதற்காக திண்டுக்கல் கோட்டாட்சியரால் வழங்கப்பட்ட தண்டனை உத்தரவு(RTI மூலம் பெறப்பட்டது) | சார்வு நகல் |
| 2. | -- | O.S.No.61/2021–ன் பிராது நகல் | சான்றிட்ட நகல் |

2) <u>**மனுவுரை சுருக்கம்**</u>

இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் 6–ம் பிரதிவாதியாவார். இதனுடன் இணைக்கப்பட்டுள்ள ஆவணங்களின் பட்டியலில் விவரிக்கப்பட்டுள்ள சில ஆவணங்களைத் தாக்கல் செய்துள்ளார். இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள 1வது ஆவணம் மனுதாரரின் வீட்டில் தொலைந்து, நேற்றுதான் கண்டுபிடிக்கப்பட்டது என்றும், 2வது ஆவணம் சமீபத்தில் பெறப்பட்டது. எனவே, அவற்றை உரிய நேரத்தில் தாக்கல் செய்ய முடியவில்லை. எனவே, மனுதாரர்கள்/6ம் பிரதிவாதி தரப்பில் ஆவணங்கள் தாக்கல் செய்வதிலுள்ள காலதாமதத்தினை மன்னித்து, மேற்படி ஆவணங்களை மனுதாரர்கள்/6ம் பிரதிவாதி தரப்பு ஆவணங்களாக ஏற்றுக்கொண்டு வழக்கை மேல் நடத்த வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) <u>**எதிருரை சுருக்கம்**</u>

எதிர்மனுதாரர் இம்மனுவில் 1ம்எதிர்மனுதார் /1ம் வாதி ஆவார். 2ம் எதிர்மனுதாரருக்காகவும் சேர்த்து எதிருரையை தாக்கல் செய்கிறார். மேலும், மனுதார் தனது மனு பாரா 3 மற்றும் 4ல் கூறியுள்ள சங்கதிகள் வன்மையாக மறுக்கப்படுகிறது. மேலும், இவ்வழக்கானது நிலக்கோட்டை உரிமையியல்

நீதிமன்றத்தில் O.S.150/2014 என்று தாக்கல் செய்யப்பட்டு, அதன் பின்பு இந்நீதிமன்றத்திற்கு மாறுதல் செய்யப்பட்டு நிலுவையில் இருந்து வருகிறது.

மேலும் மனுதாரரை வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்து முடித்த நிலையில், மனுதாரரை மீண்டும் முதல் விசாரணை செய்ய வேண்டி Recall செய்யும் பட்சத்தில், குறுக்கு விசாரணையில் ஒத்துக்கொண்ட சங்கதிகள் அனைத்தும் மறுத்து கூற நேரிடும். மேலும், மனுதார் தற்பொழுது தாக்கல் செய்யும் ஆவணங்கள், ஏன் மனுதார் தன்னை முதலில் விசாரணை செய்யும் சமயத்தில் தாக்கல் செய்யவில்லை என்பது பற்றி எந்தவொரு காரணமும் தனது மனுவில் கூறவில்லை.

மேலும், மனுதார் கூறியுள்ள ஆவணங்களை பற்றி மனுதார் தரப்பில் வாதியை 21-11-2025 அன்று குறுக்கு விசாரணை செய்யும் சமயத்தில் கேள்விகள் கேட்கப்பட்டுள்ளது. ஆகையால் அன்றைய தினமே குறியீடு செய்யாமல் காலம் கடந்து இம்மனுவினை தாக்கல் செய்துள்ளது சட்டப்படி செல்லத்தக்கதல்ல. மேலும், இம்மனுவினை, 1,2 எதிர்மனுதார்கள்/வாதிகள் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டி எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) இனி தீர்மானிக்க வேண்டியது யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

4) **தீர்வு**

மனுதாரர்/6ம் பிரதிவாதியின் மனு மற்றும் வழக்குக் கோப்பினைப் பரிசீலனை செய்ததில், அசல் வழக்கானது மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தரஉறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இம்மனுவில் சொல்லியுள்ள ஆவணங்களை ஏற்கனவே தாக்கல் செய்யாததற்கு,

இம்மனுவில் சொல்லியுள்ள காரணம் இம்மனுவை அனுமதிக்க போதுமான காரணம் தான் என்று இந்நீதிமன்றம் தீர்மானித்தும், மனுதாரர்களது தரப்பில் ஆவணங்கள் தாக்கல் செய்வதிலுள்ள காலதாமதத்தினை மன்னித்தும், தரப்பினர்களுக்கு அவர்களது ஆவணங்களை தாக்கல் செய்வதற்கு போதுமான நியாயமான வாய்ப்பை வழங்க வேண்டும் என்பதை கருத்திற்கொண்டு, இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ள கூடுதல் ஆவணங்களை ஏற்றுக்கொண்டும் இவ்வழக்கின் இறுதியான தீர்விற்கு இம்மனுவை அனுமதிப்பதுதான் நீதியின் நலன் கருதி சரியானது என்று இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுகிறது.

**முடிவில்**, மனுதாரர்கள்/6 பிரதிவாதி தாக்கல் செய்துள்ள கூடுதல் ஆவணங்களை குறியீடு செய்ய அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணிணி மூலம் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்ட பின்னர் 2026ம் ஆண்டு ஜீலை மாதம் 04 ஆம் நாள் என்னால் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

SUBRAMANIYAN ANBUTHASAN
Digitally signed by SUBRAMANIYAN ANBUTHASAN
Date: 2026.07.24 16:56:12 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர் ஆத்தூர்.

**மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி, சாண்றாவணங்கள்** : இல்லை

SUBRAMANIYAN ANBUTHASAN
Digitally signed by SUBRAMANIYAN ANBUTHASAN
Date: 2026.07.24 16:56:16 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர் ஆத்தூர்.